

## வெட்டப்படும் ஒரு மரத்திற்குப் பதிலாக

# 100 மரங்களை நடுங்கள்

### பிரதமர் உத்தரவு

கோலாலம்பூர்,மே 16-

தலைநகரில் வேறுவழியின்றி வெட்டப்படும் தலா ஒரு மரத்திற்கு பதிலாக 100 மரங்கள் நட வேண்டும் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கோலாலம்பூர் டத்தோ பண்டார் கமாருல் ஸமான் முகமட் சாலேவிற்கு உத்தரவு பிறப்பித் துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் தமதுஎக்ஸ் தளத்தில் கருத்து பதிவேற்றம் செய் துள்ளார். முன்னதாக அபாய நிலையில் உள்ள மரங்களை வெட் டும்படி பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தபா கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

கடந்த வாரம் சுல்தான் இஸ்மாயில் பகுதியில் திங்கட்கிழமை ஜாலான் பினாங்கிலும் மரங்கள் சரிந்ததை அடுத்து அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித் திருந்தார். ஜாலான் சுல்தான் இஸ்மாயில் சாலையில் மரம் சாய்ந்ததில் ஒருவர் மரணமுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

